# வெ. 40 லட்சம் குத்தகை விவகாரம் :
# மாநகர மன்ற உறுப்பினர் மீது விசாரணை தொடர்கிறது



கோலாலம்பூர், பிப். 11- கோலாலம்பூர் மாநகர மன்றத்தின் ஆலோசனை வாரிய உறுப்பினர் ஒருவர் 40 லட்சம் வெள்ளி திட்டத்தை வழங்குவதில் விதிமுறைகளை மீறினார் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடந்து வருகிறது என்று மாநகர மன்ற மேயர் டத்தோ ஸ்ரீ மைமுனா முகமட் ஷாரிப் கூறினார். இது மாநகர மன்றத்தின் நிர்வாக சம்பந்தமான ஒரு முக்கியமான விசாரணை. எனவே இது பற்றிய விசாரணை முழுமையாக நடந்து வருகிறது. இந்த விசாரணையின் முடிவு பொது மக்களுக்கு தெரிவிக்கப்படும்.

ஒரு திரைப்பட தயாரிப்பாளரும் இயக்குநருமான அந்த ஆலோசனை வாரிய உறுப்பினர் பொது குத்தகை முறையை மீறி தனக்கு வேண்டியவர்களுக்கு இந்த சலுகையை தர முன்வந்தார் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.